ஸ்ரீ

சம்பந்தர் பிள்ளைத்தமிழ்.

ஆசிரியர் :—மாசிலாமணித்தேசிகர்.

அமரர் சி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி.

காழியர்கோன் றமிழ்ப்பெருமை யாவ ரோரார்
கனலோரும் புனலோருஞ் சீர்மா றப்பேர்ப்
பூழியர்கோன் கூனேரும் புல்லுங் கல்லும்
புகலியர்கோன் புலப்படுத்தா லோரு மாதோ.

ஸ்ரீகாழி: K. வைத்தியநாதமுதலியார்,
பதிப்பாசிரியர்.

பதிப்பாசிரியர் பெருமை.

நதிதருசெஞ் சடைப்பெம்மா னிவனென்றே
    தளிர்க்கரத்து நவின்று சுட்டித்
துதிபெறுநற் சம்பந்தப் பெருமான்பிள்
    ளைக்கவிதை துலங்க வச்சி
னிதமுறவே பதிப்பித்துப் பெரும்புகழும்
    புண்ணியமு மியையப் பெற்றுன்
மதுகரத்த மலர்க்காழிக் கிருட்டினசா
    மிப்பெயர்கொள் மகிபன் மைந்தன் (க)

அம்மகிழ்நன் மனமுவப்பா னறம்பலகா
    மக்கண்ணி யன்பி னுற்ற
விம்முதடத் தருட்பாலித் திருத்தொண்டை
    மண்டலத்து வேளாண் வேந்த
னெம்மருங்கு மிசைகவினக் கலைநிறைந்த
    கனதனவா னெழிலி யன்ன
செம்மலெழிற் பூந்தாயப் புரக்கும்வைத்
    தியநாதச் சீரி யோனே. (உ)

சீகாழி,
9—3—26. } ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

உ

சிவமயம்.

கணபதி துணை.

திருஞான சம்பந்தர்

பிள்ளைத் தமிழ்.

திருவாவடுதுறையாதீனத்து எட்டாவது பட்டத்து

மஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணித்தேசிக சுவாமிகள்

இயற்றி யருளியது.

இஃது

ஸ்ரீ காழி

ஸ்ரீமாந்-கி. சிதம்பரநாதமுதலியாரவர்கள்

விருப்பத்தின் படி

அன்னுரிளவல்

ஸ்ரீமாந்-கி. வைத்தியநாதமுதலியாரவர்களால்

பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

ஸ்ரீ காழி,

திரிபுரசுந்தரி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

பிரதிகள் ௧000.] Copy Right Reserved. [விலை அணு ௨.

1926.

உ

பிள்ளைத் தமிழ்த்தலைவர் சிறப்பு.

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன ; இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன ; நல்லசங்கத்
தோன்றும் புலவர்க ளியாப்புக் குரியன ; ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

நம்பியாண்டார் நம்பிகள்.

பிள்ளைத் தமிழாசிரியர் சிறப்பு.

பணங்கொளு மரவ முடித்தலை பரிக்கும்
பாரிடைச் சைவவான் பயிரை
யிணங்குற வளர்க்குங் காழியெம் மிறைவ
னிளம்பரு வத்திசைத் தமிழை
வணங்குறும் புலவர் வழுத்திட வழுத்தி
மாசிலா வண்புக ழுற்று
ணங்கருந் துறைசை யதிபதி வெண்காட்
டுத்தமன் மாசிலா மணியே.

காழி அபியுக்தர்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சம்பந்தர் பிள்ளைத் தமிழ்.

முகவுரை.

—※—

சம்பந்தர் முத்தமிழைச் சாற்றத் துணையாகுஞ்
சம்பந்தர் பிள்ளைத் தமிழ்.

ஸ்ரீசிவஞானசுவாமிகள் ‘இளம்பருவ விளையாட்டை நோக்குழித் திருவுரு விடத்தாசை மிகுதியுண்டா மென்பதால், வித்தார கவிக்கெலா முன்னுற வியன்றபிள்ளைக்கவிதை’ என்பதனாற் பிள்ளைத்தமிழ் இத்தன்மையது என்பதும், அப் ‘பருவத்தி லருகொன்று தாதியர்சொல் கூற்று’ என்பதனாற் கூற்று இன்னா ருடையது என்பதும் புலனாகும். பிள்ளைக்கவிக் கிலக்கணங் கூறுந் தொல்காப்பியப் புறத்திணையியல் உகூ-ம் சூத்திரத்தானும், அதற்கு நச்சினார்க்கினியர்முதல் உரையாசிரியர்கள் உரைக்கும் உரையானும், பன்னிருபாட்டியல் கஎஅ-ககூகூ சூத்திரங்களானும், இலக்கணவிளக்கம் அஎகூ-அஎஅ சூத்திரங்களானும், பாட்டியல்களானும் பெரும் புலவர் தாம் வழிபடு கடவுளையேனும் பெரியாரையேனும் குழந்தையாகப் பாவித்து, அப்பருவத் தக்குழந்தை செய்யுஞ் செயல்களை வருணித்துப் பாடும் பிரபந்த மெனவும், இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என இருவகைப்படு மெனவும் விளங்கும். பிள்ளைக்கவி புறப்பொருள் வெண்பாமாலையினும் (கூ-ருஉ), பெரியாழ்வார் திருமொழியினும், கலித்தொகையினும், பிறவற்றினுங் காணப்பெறும். ஒட்டக்கூத்தர்,

வேம்பத்தூரார், குமரகுருபரசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள், மாதவச்சிவஞானயோகிகள், மீனாக்ஷிசுந்தரபிள்ளை முதலிய ஆன்றோர் பலர் இயற்றியருளிய பிள்ளைத்தமிழ் நூல்கள் பெரிதும் போற்றற் குரியவை.

சம்பந்தர் பிள்ளைத்தமிழ் என்னும் இச் சீரியநூல் திருக்கழுமலத்து ஆளுடைய பிள்ளையாரை விஷயமாக வுடைய ஆண்பாற் பிள்ளைத்தமிழாதலானும், இதனைத் திருவாய் மலர்ந்த திருவருளாளர் கஎ-நூற்றாண்டின் தொடக்கத்திற் றிருவெண்காட்டிற் றிருவவதாரஞ்செய்து இச் சிரபுரத்துத் தமது தாயாரகத்து வதிந்து இந்நூலைப் பாடிப் பின்னர்த் திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து அ-வது பட்டத் திலகிச் சிவஞானமுனீந்திரராய்ச் சுவேதாரண்யத்திற் பரிபூரணதசையடைந்த ஸ்ரீமாசிலாமணித்தேசிகராதலானும், இம் மகானது திருவாக்கு அவ் வாதீனத்துத் திருதீய சுவாமிநாததேசிகராற் பெரிதும் பாராட்டப்பட்ட தொன் றாதலானும், இந்நூலைப் படனஞ்செய்வார் இஷ்டப்ராப்தியும் அநிஷ்டநிவாரணமும் எக்காலமும் பெற்று வாழ்வ ராதலானும், இஃது சிவஞானப் பேற்றிற்குச் சாதன மான தொன்றாதலானும் இதனைப் பிரசுரிக்கக் கருதி, யான் எனது திருமாளிகைச் சுவடியையும், இவ்வூர் வித்துவான் சிதம்பரப்பிள்ளையவர்கள், திருவாரூர் இலக்கணவிளக்க பரம்பரைச் சோமசுந்தரதேசிகரவர்கள், சிதம்பரம் பண்டித ஸ்ரீ. வ. மு. மாணிக்கபட்டாரகரவர்கள் இவர்கள்மாட்டுள்ள ஏடுகளையும், தஞ்சை சரசுவதிமால் தமிழ் நூற் பரிசோதகரவர்கள் குறிப்பையும் பார்த்துச் சோதித்து அச்சிடுவிக்க லாயினேன். ஏடு பேர்த்தெழுதுங் காலத்தும் அச்சிடுவிக்குங் காலத்தும் என்னோடு உள்ளன்போடு உழைத்து உதவிபுரிந்து வந்த பெருந்தகையாளர்கள் பென்ஷன் சப்ரிஜிஸ்தரார் ஸ்ரீ சு. சிதம்பரமுதலியாரவர்களுக்கும் வித்வ ஸ்ரீ.ப.அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்களுக்கும் எனது நன்றி வந்தனத்தை என்றுஞ் செலுத்தற் குரியேன்.

இப் பிள்ளைத்தமிழிற் பத்துப் பருவங்கள் வர்ணிக்கப்படும். அவை :—க. காப்புப்பருவம்—குழந்தையைக் காக்க எனத் திரு

மால் (இங்கு அம்மையப்பர்) முதலிய கடவுளரை வேண்டும் பருவம்:—இது இரண்டாம் மாதத்தில் நிகழ்வது. உ. செங்கீரைப்பருவம்—செங்கீரைபோல அசைந்தாடும் பருவம், குழவி தலையெடுத்து முகமசைத் தாடும் பருவம், செவ்விய (கீர்) சொற்களைப் பேசும் பருவம், இப் பருவத்து நிகழுஞ் செயல் ஒருகாலை மடக்கி ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத் தூன்றித் தலை நிமிர்த்து முக மசைய ஆடுதல்; இது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது. ங. தாலப் பருவம்—பிள்ளையைத் தொட்டிலிலிட்டு மகளிர் (தால்) நாவினாற் பாடித் தொட்டிலை யாட்டும் பருவம், தாலாட்டு தாராட்டு எனவும் வழங்கும்; இது எட்டாம் மாதத்தில் நிகழ்வது. ச. சப்பாணிப்பருவம்—இருகரங்களையு மொருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம், கையொடு (பாணி) கைபொருந்தக் கொட்டும்படி கூறும் பருவம்; இது ஒன்பதாம் மாதத்தில் நிகழ்வது. ரு. முத்தப்பருவம்—முத்தம் (அதரம்) கொடுக்கும் பருவம், முத்த மிடும்படி கூறும் பருவம்; இது பதினொன்றாம் மாதத்தில் நிகழ்வது. சு. வாரானைப்பருவம்—வருகையை (வாரானை) விரும்பிய பருவம், தாதியர் பிள்ளை நடந்து வருதலை விரும்பி யழைக்கும் பருவம்; இது பன்னிரண்டாம் மாதத்தில் நிகழ்வது. எ. அம்புலிப்பருவம்—சந்திரனை யழைக்கும் பருவம், பிள்ளையை மங்கையர் ஒக்கலையில் வைத்துக் கொண்டு அப்பிள்ளையுடன் அம்புலியை விளையாட வா வென்று சாம பேத தான தண்ட முறைகூறி யழைக்கும் பருவம்; இது பதினெட்டாம் மாதத்தில் நிகழ்வது. அ. சிற்றிற் பருவம்—சிறுமியர் இழைத்த சிறுவீட்டை யழிக்கும் பருவம்; இது இரண்டாம் ஆண்டில் நிகழ்வது. கூ. சிறுபறைப் பருவம்—சிறுபறை கொட்டும் பருவம்; இது மூன்றாம் ஆண்டில் நிகழ்வது. க0. சிறுதேர்ப் பருவம்—சிறுதேரை யுருட்டும் பருவம்; இது நான்காம் ஆண்டில் நிகழ்வதாம். இவ்வாற்றாற் சுவாபதேசமுங் கூறுதற் கமைந்த இத்தமிழ் மூன்றாந் திங்கள் முதலாக இருபத்தொரு திங்கள் காறும் அதன்பின்பும் பெற்றோரையும் பிறரையும் பாட்டுடைத் தலைவரையுங் கேட்பிக்கத் தக்கது. பெண்பாற்பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவத்தின்பின் கழங்கு (அல்லது நீராடல்), அம்மானை, ஊசல் என்று மூன்றுங் கூட்டிக் கவிகள் பாடுவர்.

இங்ஙனஞ் சிறப்பு வாய்ந்த பிள்ளைத்தமிழுள் இந்நூலேடுகள் பிரதிபேதங்களோடு சிலவிடத்து இரண்டொரு கவிகள் குறைந்தனவாகக் காணப்பட்டன. அவற்றுட் பொருந்திய பாடங்களை இங்குப் பிரசுரிப்பன. இந்நூலை யாக்கியோர் திருவெண்காட்டு எல்லப்ப நாவலரெனவும், திருவாரூர்ச் சதாசிவதேசிகரெனவுங் கூறுவாருமுளர். இந்நூற் பக்திரசஞ் செறிந்து சொன்னோக்கும் பொருணோக்கு மமைந்த மாண்பின தாகலின், பூந்தராய்க் கவுணியப் பூசுரர்பாற் பேரன்போடு யாமனைவரு மினிதி னோதி, திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்பும் பொற்புறு மில்லும் புதல்வர்ப் பேறும் நற்பொருட் பூசையும் நாடும் புகழும் நன்குற்று, ஞான வைராக்கிய முறுகி, நமது குருபரரைக் குழவியாகக் கொண்டு, நமது ஆன்மா அனர்த்தப்படாவாறு சொரூபத்திற்குத் தக்க அப் பிள்ளையாரது நித்திய திருப்பணியை நமக்கு அன்னார் அருளல் வேண்டுமென்று தாதியாக நம்மை யாஸ்தானம் பண்ணிப் பிரார்த்தித்து, ப்ராப்யத்வரையாற் சாதனத்தின் விலகாது மெய்ப்பயனெய்தி, சத்தைக் குலையாதவை அவர்ஜ்ஜநீயங்களும் ப்ராப்தங்களு மாவன வாதலின் ஸ்ரீசிவஜ்ஞாந ப்ரவ்ருத்தியிற் சேர்ந்து, திருவாரூரில் தைப் பூசம், பங்குனி யுத்தர முதலிய விழாநாட்கள் பத்தினும் ஆளுடையபிள்ளையா ருலா வெழுந்தருளுங்கால் இப்பிள்ளைத்தமிழை யோதுவிப்பதுபோல (செந்தமிழ் ௧௫, ௩௨; ௧௬, ௩௭௫) மற்றைச் சிவாலயங்களினும் ஓதுவித்து, பேரானந்தப் பெருவாழ் வதுவும் பெரிதும் பெற்றுய்வே மாக.

சுபம்.

ஸ்ரீகாழி,
குரோதன௵ மகரரவி
௧௨௳.

இங்ஙனம்,
K. வைத்தியநாதமுதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சம்பந்தர்பிள்ளைத்தமிழ்.

நூல்—காப்பு, வெண்பா.

ஆபத்துக்காத்தபிள்ளையார்.

துறக்கவொண் ணாவைவர் சூழலிற் சூழ்வார்
துறக்கவொண்ணா வீடு துறப்பேன்—மறக்கதிர்வேன்
மாபுரத்தார் வேவ மலைவளைத்தார் மைந்தரெழு
கோபுரத்தார் நூபுரத்தாள் கொண்டு.

காப்புப் பருவம்.

அம்மையப்பர்.

கார்மேவும் பொழில்சூழுங் கதிர்மாட வீதிக்
    கழுமலத்தார் பெருவாழ்வைக் கவுணியனைக் கமலத்
தார்மேவுந் திருப்புயத்துச் சைவசிகா மணியைச்
    சம்பந்தப் பெருமானைத் தமிழ்க்களிற்றைப் புரக்க
பார்மேவும் மறைவாழத் திருப்பொய்கைக் கரையிற்
    பவளவாய் திறந்தழுத பசுங்குதலை கேட்டுச்
சீர்மேவுந் திருத்தோணி யழகோடு மிருந்தார்
    சென்றுமழ விடையுடனே நின்றதிரு நிலையே. (௧)

வேறு. திருநீறு.

இரவிதுவக் கிவிடு குரதுரகத் திரளை
மேற்குப் பாய்ச்சு
மிரவின்மடத் திவிடு கனல்வழுதிக் கிடவு
மேட்டிற் நீட்டி
யெரியிவிடக் கடவ தெனவவரிட் டவுரை
தீக்குத் தோற்க
வினியதமிழ்ப் பனுவல் பனிமலரொத் தெழவும்
நாட்டைச் சூழ்த்த
பரவைபுகப் பெருகு நதியினில்வெற் றுடல
மேற்புற் போர்ப்பார்
பழிமொழிபொய்க் கவெதிர் வழிமொழிமெய்த் திடவும்
நீர்க்குட் பூத்த
பதுமமலர்ப் புதுமை யனையதிருக் குவளை
சாத்திப் போற்றல்
பழகு பவுத்தனொரு சிரமுருளத் தொடவும்
நாற்றிக் கேற்க
விரவுபுகழ்ப் பழன மயிலையிலச் சமொடு
பூத்துப் பூத்து
விடுமரவெச் சில்பொதி குடம்வடிவைத் தரவு
மாற்பொற் பேற்ற
வியன்மதுரைக் குளமண் மிருகமடைப் புகுதும்
வேட்டைக் காட்டை
விரகில்வளைத் துரிய செலவிலழித் திடவு
மேற்றிற் றேற்று
மரனைவிரற் கமல மலரையெடுத் தினிது
காட்டிக் காட்டி
யமுததமிழ்க் குழவி சிறுபிறைநெற் றியினில்
வாய்க்கச் சேர்க்க
வடவிதுவக் கிவரு பிறவிதவிர்க் குமென
வேற்றிச் சாற்று
மடியவர்தத் தமடி யமரர்துதிக் கவரு
ணீற்றுக் காப்பே. (உ)

வேறு. கான்மாறியாடியவர்.

அலையார் புனல்சூழ் கூடலிலன்
றருகத் திரளைக் கழுவேற்றுங்
கலையார் செஞ்சொற் றமிழ்ப்பெருமான்
காழிப் பெருமான் றனைக்காக்க

தொலையா நீதித் திருநீற்றுச்
சொக்கப் பெருமான் நம்பெருமான்
மலையான் மகளார் தமிழ்ப்பெருமான்
மன்று ளாடும் பெருமானே. (௯)

வேறு. சிற்சத்தி.

இருளுருவ மாலுததி யமுதாக்கி
வான்றேவர்க் கூட்டவு
மெழுதரிய நான்மறைக ளயன்வாக்கி
லாய்ந்தோதிக் காட்டவு
மிரவியெழு பார்பொதியு மிருணீக்கி
வான்றேர்விட் டோட்டவு
மிசைபுனையு மாமுனிவர் தவவாய்ப்பு
நீங்காமற் பார்க்கவு
மருவுமத யானைபல திசைகாத்தல்
பாங்காகக் காக்கவும்
வடகனக மால்வரையின் முறைகோத்தல்
வான்பாரைப் பார்க்கவு
மறுகிவிடு வார்களிடு பலியேற்கு
மாண்டாருக் கோட்டினில்
வருநெலிரு நாழிகொடு குடிவாழ்க்கை
வாழ்ந்தானைப் போற்றுது
மரியசிவ ராகவனை யொழுகாற்றி
லூர்ந்தோடத் தாற்கரை
யணையவரு மாமணியை முகிலார்த்த
கோன்கூனைப் போக்கிய
வதிமதுர வாசகனை வழிகாக்கு
மாண்டாலத் தாற்பழ
மருள்புரியு மாதவனை யழல்வேட்கை
மூன்றுய்முட் டாதுதொழில்
கருதுசதுர் வேதியனை யருணீற்றை
யாங்காணக் காட்டிய
கமலகர நாயகனை யலைவாய்க்குள்
வீழ்ந்தோடக் கார்க்கலி
கடுகியடு சேவகனை வயல்சூழ்த்த
பூங்காழித் தோற்றிய
கவுணியர் குலாதிபனை யமண்வேட்டை
போர்ந்தானைக் காக்கவே. (௧)

வேறு. விநாயகக்கடவுள்.

இட்டபட ரெரியினவர் முட்டச்சொல் வேவமலை
யெற்றிவரு நதியிலிடு சொத்தைச்சொல் வேலைபுக
வெக்கரிடு தாளம்விளை கொற்கைக் குலாதிபதி
யெய்ப்பவிடு தழல்குளிர முற்பட்ட கூனிமிர

விட்டவிடை யுடனுலவு கட்டப் பதாதியமண்
மிச்சியரை யொழுகுகழு வுச்சிக் கடாவியருள்
மெத்தவர வொலிவளர முத்துற்ற நீழல்வரு
வித்தகன் றிசைதிசையி லத்திக்கு மாறருள்க

வட்டகுல கிரிமறையி னுற்பத்தி யானசெவி
யற்பமிசை யினுமிளக வொப்பித்த வாபரண
மக்கர்வெயில் விடுசுடிகை வர்க்கத்த வாய்மிளிர
வக்கடல்க ளடையவொரு கைக்குப் பொருசுவற

முட்டவெளி மறையவதின் மட்டித்த தோள்வளர
மொட்டைபட வமரர்தலை குட்டிக்கொ ளாமுனிவர்
முத்திதரு பெருவயிறு மெத்தப் பராவரிய
முக்கனியு மமுதுசெயு முக்கட் கடாமலையே. (ரு)

வேறு. முருகக்கடவுள்.

கடலை யிரட்டி யிரட்டி நாளும்விழி
கடிய புனல்கக்க முத்தி தேடும்வகை
கருதி மயிரைப் பறித்து வாய்சகதி
கமழ வுணவைப் பெருக்கி மாசுடைய

வுடலை வளர்புற் றெடுத்த பாய்பொதியு
முலவு கழுதைப் புரக்க மாவமண
ரொழுகு கழுவிற் பதைக்க வாதுசெயு
முரியு துணையைப் புரக்க நீடுதிறல்

விட வரவினுச்சி வைத்த பார்வயிறு
மிக வெரியிலுற்ற திக்கி லானைபல
விடு செவிடுபட்ட லக்க ணுகமலை
மிசை யுருவுபெற்ற தொத்து நாடரிய

வடலி னெடுகொக்க ரித்த சூரனுட
லறு குறையினைப் புசித்த பேய்கவர
வணிமயி லுகைத்து வெற்றி வேல்கடவி
யமரர் சிறைவெட்டி விட்ட சேவகனே. (சு)

வேறு. திருப்பொய்கை.

இழிந்த தேவரை யாமெலாந் தேவரென்
　　றேத்திய தடுமாற்ற
மழிந்து போம்வகை யையனைக் காட்டிநின்
　　றழுதவன் றனைக்காக்க
மொழிந்த நாண்மலர்ச் சீறடிப் பேதையார்
　　முகிண்முலைத் திருஞானம்
பொழிந்த பான்மணந் தன்மண மாக்கிய
　　பொய்கையங் கரைதானே. (௭)

வேறு. திருப்பதி.

வரும்மணை யழித்தானைக் கூனையொழித் தானை
　　வலியவிடந் தீர்த்தானைத் தலைவிழப்பார்த் தானை
மதுரையினில் வென்றானை யழகுறநின் றானை
　　மறைவிளங்க வந்தானைத் திருநெறிதந் தானைத்
திருமுலையுண் டழுதானைக் கண்டுதொழு தானைத்
　　திருநீறு புனைந்தானைக் கலியைநலிந் தானைத்
தேவர்தொழற் கரியானைப் பரவவுரி யானைத்
　　திருஞான சம்பந்தப் பெருமானைப் புரக்க
பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி சுரும்பார்
　　பிரசமலர்ப் பொழில்புடைசூழ் வெங்குருமெய்த் தோணி
பிறங்குபுனற் பூந்தராய் நிறங்கொள்சிர புரஞ்சீர்
　　பேசரிய புகழ்ப்புறவந் தேசுயர்தென் சண்பை
பரமகதி தருங்காழி கொச்சைகழு மலமாம்
　　பலவமரர் நிலைகுலையப் பிரளயங்கோத் தெடுத்த
பரவையிணி லுலகழுந்த வழுந்தாது மிதந்த
　　பன்னிரண்டு திருப்பெயரும் படைத்தபழம் பதியே. (௮)

வேறு. திருப்பதிகம்.

செய்யமலர்த் திசைமுகனுந் திகிரிதரித் தோனுந்
　　தேடரிய திருவுருவைத் திருவிரல்முன் னிறுத்தி
யையனிவ னெனக்காட்டி யழுதமுத முண்டா
　　னெனநமதென் றபெரு மானையினி தளிக்க
வையைநதிக் கெதிர்நடப்பக் கனல்குளிரக் கிடப்ப
　　மாமுனிவர் தொழுதரற்ற நான்மறையின் சிரத்தைப்
பையரவின் விடந்தீர்ப்பப் பனைபழுப்பப் பார்ப்ப
　　பானுலுந் திருப்பதிகம் பதினொ ருயிரமே. (௯)

வேறு. சட்டைநாதர்.

முலையானவை யானைகண் முகமானவை தாமரை
　　மொழியானவை தேனிகல் விழியானவை வேலவை
விலையாள்வன காமனை யெனமாத ருலாவரு
　　மிருகாழியுள் ஞானனை யருள்கூர்தரு மேல்வரு
மலையான்மக ளாலய மகல்வான் முகடேறிட
　　வசையாதொரு தோணியி லடையாரெயில் காதிய
சிலையான்மலை யான்மக ளுடனேயழ கோடமர்
　　திருவாரொளி நீடிய திருஞாயிறு காணியே. (௰)

வேறு. மற்றைத் தெய்வங்கள்.

தருமத்தின் வழிபிழைத்தார் புரமெரித்துச் சிலர்க்குத்
　　தாரத்துறையும் பதங்கொடுத்தோ னாரத்துறையி னளித்த
திருமுத்தின் சிவிகைமிசை யசையவரு மணியைச்
　　சேவித்தங் குடன்வருவார் செங்கமலத் தயன்மால்
பருமத்தக் களியானைத் திசையெண்ம ரருக்கர்
　　பன்னிருவ ருருத்திரர்கள் பதினொருவர் மறைநூற்
கருமத்து மருத்துவராங் கோரிருவ ரெழுவர்
　　கன்னியர்க ளெனவுரைக்குங் கனகதலா திபரே. (௧௧)

காப்புப்பருவ முற்றிற்று.

செங்கீரைப் பருவம்.

கோலொன்று கொண்டகில வலயம் புரக்கவரு
　　கோமாறன் மேவிய தமிழ்க்
கூடலிற் சமண்மூகர் திருமடத் திட்டவெரி
　　கொற்றவற் பற்ற மொழியா
மாலொன்று மங்கையர்க் கரசியார் படுதுயரின்
　　வலிகண்டு சென்று தவிர
வஞ்சப் பெருங்கூனும் வெப்புந் தவிர்த்தருளு
　　மதுரவா சகமதகு பாய்
காலொன்று மாநதி பரந்துவரு கழனியிற்
　　களையெனக் குவளை களைவார்

கண்டுவெரு வித்தங்கள் கைநெரித் தருகுமிடை
கன்னலங் காடு மறையச்
சேலொன்று விளையாடு சீகாழி நாடாளி
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே. (க)

ஒருமலைச் சாபம்வளை யத்திரிபுரஞ் செற்ற
வும்பர்நா யகனருளி னு
லோரா யிரங்கதிர்க ளுடையசூ ரியரடைய
வுடனிருந் தனைய வொளிசூழ்
பருமணிக் காலினொடு பலகோடி வெண்டிங்கள்
பாரித்த தனைய தரளப்
பந்தரிற் பட்டச் சரத்தன்று குலவவரு
பரசமய குலகால னீ
தருமலர்த் தாதுவிரி தாமரைக் காடுமெழு
தாணீல முங்குமுத முந்
தந்தமண நாறுமுலை தந்தவுமை யாளொடு
தடம்புனற் கரையி லுதவுந்
திருமுலைப் பால்நாறு சீகாழி நாடாளி
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே. (உ)

கையினுல் நாடோறுங் களமரிது களையெனக்
களையொணு தென்றும் வயலிற்
காலினுல் மடையுழறு கருமேதி யினம்வரிற்
கவரொணு தென்று மனுகா
வெய்யகா னகமனுகி மேயுமா னினம்வந்து
மேயொணு தென்று மலைவாய்
விளைதினை காக்கும்வகை வெட்டுவார் படைகொண்டு
வெட்டொணு தென்றும் விரகால்
மையுலா வியவிதழ்க் குவளையுங் குலவுகொடி
வள்ளையுந் தளவு மழகார்
வண்குமிழு மிருளகல மாணிக்க வொளிவீச
மாடமா ளிகைதோறு மோர்
செய்யதா மரையின்மலர் சீகாழி நாடாளி
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே. (ங)

அகரவட் டக்கலச முலையரிவை யொருபக்க
மாசாள விட்டு முடிமே
லம்பரத் திடையுலவு கங்கைப் பெரும்பரப்
பலையெறிய விட்டு மிசையே
பகருமெட் டுத்திசையு முலவுபுர மெரிபடப்
பகழிவிட் டயனுச் சியிற்
பச்சைத் தலைக்குளிடு பிச்சைக்கு நச்சிவரு
பரமரருள் பெறுபுதல்வ மா
மகரவட் டப்பரவை யெழுமுகட் டுக்கிழிய
மஞ்சுவிரி யுங்குலை விடா
வாழைப் பெருங்காடு தாழைப் பெருங்காடு
மண்டிவளர் சக்ர வாளச்
சிகரவட் டத்தைநிழ லிடுபுகலி வருகுருசில்
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே. (ச)

கஞ்சா சனத்தரிவை பிரியாத தாமரைக்
கண் ணுடைக் கண்ண னுதரக்
கமலா சனத்தில்வரு திசைமுகக் கடவுளுங்
காணமல் நின்று கதறப்
பிஞ்சாய வெண்மதி முடிக்குஞ் சடாடவிப்
பெருமானை யொருமா மலைப்
பேதையொடு கண்டருளி வேதநிலை யிடவுரிய
பிரமபுரி வருபரம பே
ரஞ்சாத கதிரிரவி யிரதந் துவக்கிவிடு
மாடலம் புரவி யிருபா
லசையவிடு வெண்சா மரைப்பெருங் கற்றையுட
னலைகதிர்க் கற்றை யசையச்
செஞ்சாலி யுடுமுகடு தொடுபுகலி வருகுருசில்
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே. (ரு)

வேறு.

வரைசிலை யாம்படி வளையவு கந்தா னுர்ந்தா னுஞ்சால
வயிறது காந்திய தழல்செல வூன்றிய மண்டா னுண்டாக
வுரைபல தாங்கிய நிசிசார் தாங்குடி யொன்றய் வந்தேற
வுரிமையர் வேண்டிய கதிபெற வீந்தவன் மைந்தா வண்டேதும்

விரைகமழ்பூம்பணையிணையிடு தூண்டில்வெகுண்டேசெஞ்சேல்கள்
மிசைசெல வாங்கனி விரவிய மாங்கனி விண்டூ றுஞ்சாறு
திரைபொர வோங்கிய புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக செங்கோ செங்கீரை.

அயனுரை தாங்கிய சிறுவனோ டன்றறை யுந்தா ணங்கீறி
யவனுடரூன் றுடையதனிடைபோழ்ந்தணையுங்கோனஞ்சாது
வயவலி தான்சொலு மளவினி லாங்கவன் வெங்கோ பந்தீர
வயிறெரி தோன்றிட விசைகொடு போந்தவன் மைந்தா கொண்டாடு
மியலொலிபாண்கிளைமிடையொலிவாங்கியவெங்கோடுங்கோடு
மெழுமொலி தேன்றரு மினவொளி மூன்றழ லங்கே குன்றுத
செயலொளி யோங்கிய புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினிலன்றெழுமருகர்குலாந்தகசெங்கோசெங்கீரை. (எ)

வசையறவோங்கியவொருதிருவோங்கலின்வந்தேதன்றோளின்
வலிமையெலாஞ்செயமுனிவினில்வீழ்ந்துநரம்பாலென்பானு
மிசைபல தோன்றிய சூரன்முதல் வாங்கியி லங்கே சன்பாட
வினிவரு தீங்கென வெறிபடை யீந்தவன் மைந்தா மென்காவி
னசையுடன் மேய்ந்திள வெருமைகள் மாங்கனி தின்றே நின்றுள
நலனுடனீன்றதன்மகநினைவாம்பெருநண்பால்வெண்பால்கள்
திசைகளெ லாஞ்சொரி புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினிலன்றெழுமருகர்குலாந்தகசெங்கோசெங்கீரை.(அ)

விரிகதி ரோன்சுழ லிமகிரி யீன்றவள் வெங்கோ பந்தீர
விதிதலை போம்படி முனிதலை வேண்டி விருந்தாய் வந்தாரும்
வரிவளை யேந்திய மிமையவர் வேந்தனு நின்றார் கண்டாரு
மடிபிண மாம்படி பொருத பிரான்றிரு மைந்தா பண்பாடி
யரியின மூண்டெழு குழலிது காண்பவர் நெஞ்சோ டுங்கூட
வவிழ்தர வாங்கொரு சிறுகிடை நோப்படி பந்தோ டன்பாய
தெரிவையர் தாம்பயில் புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினிலன்றெழுமருகர்குலாந்தகசெங்கோசெங்கீரை. ( )

வருபகை யேங்கிட வொருபகல் வாங்கிய சங்கா ளும்பாணி
வடகிரி சூழ்ந்தலை கடைகயி றும்பணி வன்கா ளங்கால
வருள்புகல் காண்கிலம் வழியடி யோம்பர மென்றே வந்தார்க
ளமுதுணவாங்கெதிர்விடனுகர்வான்றிருமைந்தாவண்போதி
லிருசிலை தேங்கம ழொருசிலை தாங்கொடு நின்றார் வென்றேறு
மிருகணை பூங்கணையிவைபிவைவாங்கியெதிர்ந்தார்நெஞ்சோடுஞ்
செருமவர் பூண்டெழு புகலிய ராண்டகை செங்கோ செங்கீரை
செருவினிலன்றெழுமருகர்குலாந்தகசெங்கோசெங்கீரை. (௰)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப் பருவம்.

இனிதாகக் கமலைப்பூ மேய்மேதித் திரண்மீ
　　திளவாளைத் திரள்சிறு வேருவன் கரைசூழ்
கனிவாழைப் புகல்சாடா வோடாவூர் புகுதுங்
　　கதிர்மாடம் பயில்காழிக் கதிபாவான் மதிதோய்
பனிவாசப் பொழில்சூழத் திகழ்கூடற் சமணப்
　　பசுவெண்ணு யிரம்வந்துட் படுதோழத் திடையே
தனிஞானப் புலியொப்பாய் தாலோதா லேலோ
　　சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (க)

விண்டாவத் திவலைத்தெண் டிரைவீசுங் கடல்வாய்
　　விடுகற்றூண் மிதவைக்கே விடுபுற்பா யுடையார்
திண்டாடக் கரையேறத் தமிழைத்தந் தருளுந்
　　திருநாவுக் கரையன்றன் சித்தத்தின் றுணையே
வண்டானத் தெழுகொல்லிப் பண்பாடிச் சிறைதோய்
　　மணநாறப் புனலூடே மலரும்புண் டரிகத்
தண்டாமத் திருமார்பா தாலோதா லேலோ
　　சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (உ)

உருவைப்புற் படமிட்டுப் பொதியக்கற் றமணை
　　யுலவக்கற் றுரியிற்புக் குணுமொட்டைச் சமணைக்
கருவைக்கொத் தினைநட்டுத் தலமுட்டப் பயில்பற்
　　கழுவிற்றைத் தௌமயாளுங் காழிக்கற் பகமே
திருவுக்கும் படியொக்கத் திகழ்சித்ரப் பிடியைத்
　　திசையெட்டும் புகழப்பொற் குடம்விட்டுத் திரியத்
தருவிக்கத் தமிழ்ப்பெற்றுய் தாலோதா லேலோ
　　சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (௩)

வாராமே யறிவைப்போ கெனவிட்டுப் புவியோர்
　　வஞ்சப்புன் சமயத்தே மதிகெட்டுத் திரியப்
பாராமே யதுவன்றித் திகிரிக்கோன் மாயப்
　　பணிசெய்யப் பழகாமே பழுதாகா மறைநூல்
சோராமே யடிசூடுந் தொண்டர்க்கோர் துயருஞ்
　　சூழாமே தமிழ்மாறன் றுயர்ப்பட்டுச் சமணைச்
சாராமே முலையுண்டாய் தாலோதா லேலோ
　　சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (௪)

அமிழ்தாரும் படிதேவர்க் கலைநீரைக் கடைநா
ளரிகாணப் பெருவேகத் தடனகப் பருவா
யுமிழ்கோபந் தருகோலத் தாலாலந் தனையன்
றுண்டானைப் பிரியாவாழ் வுடையாள்மா மகனே
குமிழாரங் கரைவாரிக் கொணர்வையைப் புனலிற்
குணபாகத் திடுமேடக் குடபாகத் தெதிரத்
தமிழ்பாடுந் திருவாயா தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (௫)

வேறு.

சதவிதழ் முகட்டிலெழு சதுமறை பரிப்பதொரு
தலைவனெனு மெய்ப்புனித தாலேலோ
தரமிலி பவுத்தனொரு தலைமகி தலத்தினிடை
தகரவிழி வைத்தமுனி தாலேலோ
வதிமதுர முத்தமிழி னடைவுதெரி யத்தெரிய
வழுதழுது நிற்குமிறை தாலேலோ
வடல்படு திசைச்செவியி னமணர்குல சத்ருவென
வறையும்விரு துக்கதிப தாலேலோ
மதகினடி குத்துவன வளைகுலைய மொத்துவன
வழையடவி தத்துவன வாளோடாள்
மறியவெதிர் வெட்டுவன வலைகிழிய முட்டுவன
மலர்நிழலை யொட்டுவன வோரோர்செல்
கதமிகு களிற்றினின மெனநிறை தடத்துலவு
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தழலி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (௬)

படைவணிக னச்சிவிடு பணியெயிறு குக்கவிழு
படுகொலை யினைத்தெரிவை பாராமுன்
பதுமவிழி யுக்கபுனல் பரவையி னலைக்கவவள்
படுதுயர் திருக்கண்மலர் காணுமல்
விடைபெற வெடுத்தகொடி மருகலுறை யுத்தமரை
விரகொடு திருப்பதிக நேர்கூறு
விடமது கடித்தவழி யிழியவரு ளிப்புவியின்
மிகுபுகழ் பரப்புமுனி தாலேலோ
மடைதொறு முகிழ்த்தமதி யெனமணி குவித்தரவின்
வரிவளை யொலிப்பவத னேர்பாலே
வளர்பல வெடுத்தகனி கிழியவதி லுக்கபுனல்
மதகினி லொலிப்பவத னேர்பாலே

கடைசியர் மலர்க்கைவளை கலினென வொலிப்பநிறை
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (எ)

அருகுமுது விட்டவர்க ளடையநுக ரக்கனியை
யடிதொறு நிரப்புவன தேமாவா
னகமிருள மொய்த்தபொழில் மாமதுவை யுய்த்ததிசை
யழகினொடு கட்டுவன தேனீமேய்
குருகுவெரு வக்கமல மடுவினை யினத்துவரு
குலனுட னுழக்குவன நீர்நாவாய்
கொடியவுர கத்தரசர் குழிஇவழி புதுக்குவன
கொழுவணி கலப்பையத னேர்பாலே
பெருகுவய லிற்புகுது மதகினைய முத்தினிது
பிரியுமணை கட்டுவன சேதாவாழ்
பெருமைதரு நற்பழன மழகுற வுகந்தகமு
குயருமென நிற்பதொரு பேராலே
கருதிய திரைப்பரவை யுலகினை வளர்க்கவரு
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (அ)

மதுரகவி தைக்கடலின் வருபெரு மரக்கலநல்
வழிவிடு வனப்புடைய மீகாமா
மறிகட லடைத்தவனு மறையனு மதிப்பரிய
மணியினை மதித்தருள் வியாபாரா
வதிர்கலி புறச்சமய முதுகளை யறுத்துரிய
வறுசமய வித்துவிளை வேளாளா
வதிமதுர சத்தவலை மதுரையி லழுக்குடைய
வமண்மிரு கறுத்துவரு கானாளா
முதிரும்வட வைக்கனலில் முறுகுதறு கட்பணியின்
முதுகுகிழி யப்பலவின் வேர்வாய்வீழ்
முதுபழ மெடுத்தவழி யுரகபண பத்திநிரை
முழுமணி யெறித்தவெயில் வாமாவூர்
கதிரவனி லெட்டுமடி யொளிபெருக வெற்றிபுனை
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (க)

இனமொடு பறித்ததலை யருகரிக முத்திகழு
மெரியினிடை யிட்டவுரை தோலாமே
யிருகரை யொதுக்கியொரு குலகிரி யடுக்குநதி
யிடையிடை தமிழ்ப்பனுவல் போகாமே
சினமிக வடர்த்தபடை வழுதியுட லாட்கும்வகை
திரியவிடு வெப்பிலவன் வேவாமே
சிவனிட மிருக்குமுமை திருமுலை சுரக்கவளர்
திருவருள் படைத்தமுனி தாலேலோ
முனமுனை யறுத்துழவ ரிடவிட வெடுக்கும்வரி
முறைமுறை குவித்தபல சூடார்போர்
முகில்படு முகட்டினிடை முழுகவி ரதத்தினுடன்
முதன்மைதரு பச்சைவய மாவாலே
கனகவரை சுற்றிவரு கதிரிரவி யுட்கவளர்
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (௰)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப் பருவம்.

பொங்குதே னொழுகவிடு சண்பகா டவிதழுவு
பொய்கைசூழ் புகலி நகரிற்
புனிதவா ணகையுதவு குமுதவா யமுதவிதழ்
பொழியுஞா னத்தமிழி னூல்
வங்கமார் கடல்பொதியு மெண்டிசா முகசிகர
மந்தமால் வரைதழுவு பூ
மகளைவாழ் வித்துரிய மறையைவாழ் வித்தெனையும்
வாழ்வித்த மாநா யகன்
கங்கைநா யகனிமய மங்கைநா யகனிலகு
கயிலை நாயக னடுபடைக்
காளிநா யகன்வலிய கூளிநா யகனிருவர்
கருதுநா யகன்மறுவி லோர்
தங்கணா யகன்மதலை சண்பைநா யகனினிது
சப்பாணி கொட்டி யருளே
தலவலய முழுதுமக வொளிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டி யருளே. (க)

துங்கமத கிற்களமர் துன்றுகுடி விற்புரிசை
சூழுமக ழிற்படுகை யிற்
சுழிதரு குரம்பின்மலர் பொழிதரு வரம்பிலளி
சூழ்தரு கரும்பின் முதலை
பொங்குழுமை யிற்புதிய ஞெண்டின்வளை யிற்குவளை
புல்லுமல ரோடையி னறும்
பூகக் கிடங்கிலரி தாளிற் பரம்பிலிடு
போரிற் களங்களில் விடா
மங்கல மலர்ப்பணையில் வண்டெழு குளக்கரையின்
மஞ்சளிடு பத்திகளி னீள்
வாழையட ரிற்பெரிய தாழையடி யிற்கனிகொள்
மாவினிழ லிற்பொரு கடற்
சங்குசொரி முத்திலகு சண்பைநக ருக்கதிப
சப்பாணி கொட்டி யருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டி யருளே. (௨)

அருவிமுக் கடமுடைய தல்கைசுற் றியபடைய
தறுபதத் திருவுடைய தோ
ரரவிடர்ப் படவருவ தடர்பொருப் பொடுபொருவ
தறவிருட் டியவுருவ தா
மொருகரக் கொலைகடிய துலகடுக் கியவடிய
துடுவுழக் கியமுடிய தா
ருயிருருக் கியவிழிய துரிசெய்தப் பலியுழலு
மொருவர்மெய்ப் புதல்வவொளி சூழ்
மருமலர்க் கமுகடவி கதலிகைச் செறியடவி
வகுளமொய்த் தடாடவி தேன்
மலிசுளைப் பலவடவி யகருவிட் டெழுமடவி
மதுமலர்க் குரவடவி நீள்
தருநெருக் கியவடவி தழுவுகொச் சையர்தலைவ
சப்பாணி கொட்டி யருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டி யருளே. (௩)

நோமதற் குப்பெரிய நொந்தார்க ளாபொன்றை
நோவாமை செய்ய நினைவார்
நோயுடம் பானபுற் பாயுடன் பாழாக
நுண்மயிர் பறிக்கை தவிரா
மாமறைப் பேயமணர் கழுமேற் கொளப்புத்தன்
வன்சிர முருட்டி யருள்சேர்

மன்னுதிரு முத்தணி மணிப்பந்தர் மிசைநின்ற
மறையிளங் களிறுமறை தோய்
காமலர்த் தேனுண்டு மதுகரம் பெடையுடன்
காமரம் பாட வருகே
கலபமயில் நடமாட முருகுகமழ் செங்கலங்
கவரிபல வீச வன்னந்
தாமரைச் சிங்கா தனத்தேறு புகலிமுனி
சப்பாணி கொட்டி யருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டி யருளே. (ச)

கொலைபயிலும் வச்சிரத் திந்த்ராதி தேவர்தந்
தலைமாலை யிட்டு மகரக்
குழைகட லுடுத்தபடி பின்றிவரு பன்றிவெங்
கோடது புனைந்து முடிமேல்
நிலைமைதரு கங்கா நதிப்பெருந் திரையுட
னெருக்கினை முடித்துழலும் வாய்
நீடிய பணுமகுட மாசுணம் வளைத்ததொரு
நிறைநா ணணிந்து மதுரக்
கலைமகளு மலர்மகளு மணமகளு மடிபரவு
கனகமலை யரையன் மகளைக்
கமலமக னுடன்மால் புகுந்தேவல் செய்யவக்
கைப்பிடித் தருளு முரிமைத்
தலைமகனை யொருதிருத் தாதையென வுடையமுனி
சப்பாணி கொட்டி யருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே. (ரு)

உலவுசெஞ் சுடரிர்வி ரதம்வலம் புரிகிரியி
லொற்றிய கயற்கோன் விடா
துடல்வளைந் ததுநிமிர வடவிலங் கலினுழுவை
யுற்றெழுது பொற்றூ ளினு
னிலகுநண் புயர்புதல்வி யுலகின்மங் கையர்ரசி
யோர்க்கலையின் மெய்க்கூடல் வா
யிகலியன் றமண்முடுகு சகலபண் டிதமிசையை
யெட்டிய தலைப்பூ கமா
மலரின் வந்துலகுதரு பிரமன்முன் பரவவவன்
விட்டபல கெட்டேணி யோ
மலைபிடுங் கியபொழுது சிவன்விசும் புகட்கியைய
நட்டவயி ரக்கால் களோ

குலவுமிங் கிவைகளென நிலவுசண் பையர்தலைவ
கொட்டியருள் சப்பாணி யே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணி யே. (௬)

கடியவெம் பிறவிதரு கடல்விழுந் தலறுமவர்
பற்றவரு நற்றோணி யே
கலியமிழ்ந் திடவிலகு கருணையம் புனலது
பரப்பிய சரற்கால மே
யடிபணிந் தெழுமவர்த மிடிகெடும் படியருள்
ளளப்பதொரு கொட்டார மே
யறம்விரும் பிமயமயி லரனுடன் படவினிது
பெற்றதொரு கைக்காணி யே
நெடியவன் சமணிவுளி நிரைபிணம் படவுழறி
நிற்பதொரு புத்தானை யே
நிலையுடன் றெரியுமிய லிசையெனும் பயிர்விளைய
வித்துவிளை பொற்பூமி யே
கொடியகுண் டர்கள்செவிடு படமகிழ்ந் திருகைமலர்
கொட்டியருள் சப்பாணி யே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
. கொட்டியருள் சப்பாணி யே. (௭)

நிமிருமங் கொடுமுடிக ளொடியவெங் கரிகரடி
நிற்குநிலை கெட்டோட வே
நெடியசங் தகில்பறிய மணிமுகந் திருகரையி
னெற்றிபல செற்றேடி மீள்
தமரமெங் கணுமுலவ நிலவுபைங் கமுகமுகில்
தட்டிவரு கோட்டாறு சூழ்
தழுவுசண் பையர்தலைவ வெழுதுசெந் தமிழ்விரக
கொட்டியருள் சப்பாணி யே
யமரரஞ் சலிபரவு சரணபங் கயமுனிவ
ரற்புத கவிக்கோப நீ
டாசுகுண் டிகையருகர் குலபயங் கரவசுரர்
பொடிபடக் கொய்கோப ரூள்
குமரனன் புறுதுணைவ வெழுதுசெந் தமிழ்விரக
கொட்டியருள் சப்பாணி யே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணி யே. (அ)

அறுபதந் திகழ்குமுத விதழ்திறந் தழுதழுது
துய்த்தது முலைப்பாலை வா
னமரருஞ் சதுமறையு முனிவருந் தொழவினிது
பெற்றது திருத்தாளம் வாய்
முறுகுசெந் தழலிடை தளிர்நிறம் பெறவெழுதி
விட்டது தமிழ்க்கோவை வான்
முறுவலென் புகள்பொதிவ தொருகுடங் கொடுவர
வழைத்தது மலர்ப்பாவை கார்
செறிவிசும் புழுதபொழில் மிழலையம் பதியர
னளித்தது படிக்காசு சூழ்
திருவிளங்கிய மருகல் மருவுசெஞ் சடையரொடு
கற்றது விடத்தீர்வை யாங்
குறுகிநின் பெருமைசொல வெனநலம் பரவுமுனி
கொட்டியருள் சப்பாணி.யே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணி யே. (௯)

கழுமலந் திருவதிகை திருவலம் புரமருகல்
கற்குடி திருக்கோவ லூர்
களர்புறம் பியமயிலை சிவபுரங் கடைமுடி
கருக்குடி திருக்கோடி கா
மிழலைவண் டுறைபருதி நியமவண் குடிசுழியல்
வக்கரை களப்பூர் நணு
விளமர்கொங் கணமிடை தருவலஞ் சுழிதிரு
வரத்துறை திருச்சேய்ஞ லூர்
பழனமம் பலமதுரை கோகுளங் கொடுமுடி
யருட்டுறை திருப்பருவ லூர்
பறியுதண் டலைகயிலை வலிவலஞ் சிறுகுடி
பருப்பத மறைக்காடு சேர்
குழகர்தங் கழல்பரவ வுரியசெந் தமிழ்விரக
கொட்டியருள் சப்பாணி யே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணி யே. (௰)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப் பருவம்.

அலையுண் டமரர் வடம்பற்றி யாடுஞ் சுடிகைப் பணமகுடத்
தடல்வா ளரவந் தனிக்கோபித் தழலா யிரம்வா யங்காப்ப
நிலையுண் டவ்வே மூலகடுக்கி நிற்குங் கனகக் கிரிதிருப்பி
நீலப் பரவை கடைந்தநாள் நெடுவா னவரும் நெய்யுண்டு
மலையுண் டுவரிக் கடலுண்டு மண்ணுண் டவனு மண்ணுண்டு
மாளா வண்ணம் விடமுண்ட மணவா ளன்றன் மணவாட்டி
முலையுண் டமுத கனிவாயான் முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே. (க)

வழியுங்கரையிற்கழைமுத்துமணியுங்கொழித்துச்சுழித்துவரு
மானீ ரரசின் வடகரைவாய் மண்ணு டாள விண்ணுட்டி
னிழியுங் கோயில் மகிழ்ந்திருந்த மிழலைப் பெருமான்றிருவருளா
லிலகும் படிக்கா சினிதுபெறு மிசையா கரனே மிசைத்தாலிப்
பொழியுந் தரங்கக் கடலாடைப் புவியோ ரடங்கப் பரசமயப்
பொய்க்கேவிழுந்தநெறிகலங்கிப்போகாவண்ணந்தமிழ்மாலை
மொழியும் பவளக் கனிவாயான் முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே. (உ)

எருக்கேபுனலேகடிக்கொன்றையிணரேயரவேயிளம்பிறையே
யிவையேமுடிக்குஞ்சடாமகுடப்பெருமானுலகுக்கினிதளித்த
தருக்கே தெய்வத் தமிழ்க்கொழுந்தே தனிநான் மறையின் கிழங்கேபுன்
சமணப் பரிமேய் கழையுழக்குந் தனிவா ரணமே திருஞானப்
பெருக்கே யடியார் பெற்றபெரும் பேறே நாறுங் குமுதமே
பேணுந் தொண்டைச் செங்கனியே பீடார் சோதிப் பவளமே
முருக்கே யனைய கனிவாயான் முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே. (ங)

கொத்துப் படுநாண் மலர்க்கூடை குஞ்சி யாக மஞ்சனநீர்
கொள்ளுங் கலசம் வாயாக மெல்லு மிறைச்சி யமுதாகச்
சித்தத் தெழுந்த பேரன்பாற் சிலைக்கை வேடன் பணிசெய்யுந்
திருக்காளத்தியிறைவர்பாற்செம்பொற்சின்னம்பெற்றோனே
மத்தக்களிற்றுப்பணைமுத்தும்வளைவாய்முத்துங்கழைமுத்தும்
மன்னுஞ் செந்நெற் றாள்முத்துங் கன்னல் முத்தும் நிகரொவ்வா
முத்துப் பவளக் கனிவாயான் முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே. (ச)

நடிக்கும் பெருமான் பணியாலே நாபிக் கமலத் தொருமுனிவ
னுட்டுங்கிரியிற்கயலொதுங்கநாமப்புலிவைத்தொருசெண்டா
லடிக்கும் பெருமான் பிரியாத வந்தப் புரத்துக் கழகளித்த
அங்கைக் கமல மங்கையருக் கரசி யுடனே யரசோட
விடிக்கும் பெருமான் மதயானை வழுதிக் குரிய மந்திரனு [மெல்லா
லெண்ணுந் தலைமைக் குலச்சிறையார் நெடுநா ளெண்ணு மெண்ண
முடிக்கும் பெருமான் சம்பந்தப் பெருமான் முத்தந் தருகவே
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே. (௫)

வேறு.

பிணமுடைச்செஞ் சுடலைநட்டம் பயில்விருப்பம் பெருகவோர்
பிறைமுடிக்கும் பரமர்பக்கம் பெரிதுவக்குந் தலைமைசேர்
மணமிருக்குங் குழலிசெப்பின் றிருமுலைக்கண் பெருகுபால்
மருவியித்தெண் டிரைவளைக்கும் புவிவளர்க்குங் குழவிபே
ருணவுதத்தந் தவமெனக்கொண் டயிருருக்குண் டிகையினோ
ருடலுகைத்தங் கெதிர்வரைக்கண் டவருவட்டும் பரிசுசேர்
சமணரைக்குண் டரையுழக்குந் தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௬)

புளகமெய்த்தொண் டினர்பிறக்கும் பிறவியச்சந் தளரவோர்
புனல்விழக்கண் டலைபறிக்கும் பொறியில்சுற்றந் தளரவே
யளவறுக்கும் பெருநதிச்சென் றகலவெப்புந் தளரவே
யரனைவிட்டங் கரிமயக்குண் டழிவழக்குந் தளரமேல்
விளையநிற்குந் தவமில்பொய்ப்புன் சமயமுற்றுந் தளரமுன்
வினைபடைக்குங் கலியிடுக்கண் பெருகவெப்புந் தளரவூர்
தளர்நடைக்கிண் கிணியரைச்செங் குழவிமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௭)

உவமைமுற்றும் பவளமொக்குந் திருவுருக்கொண் டவனும்வே
றுருவுபச்சென் றவனிடப்பங் குரிமையிற்கொண் டவளுநீ
டவலொடப்பந் திருவயிற்றங் கடைசிவக்குங் களிறுமே
லமரர்தத்தஞ் சிறைவிடுத்தங் கசுரரைக்கொன் றவனுமார்
துவலைமொத்துஞ் சடையருக்கன் புடையமெய்த்தொண் டினருநீள்
சுருதிமுற்றுந் திருவிசைப்பண் டிருச்செவிக்கொண் டுருகவோர்
தவமில்புத்தன் றலையுருட்டுந் தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௮)

வினையுடைப்புன் சமணிருட்டின் றிரள்குலைக்கும் பரிதியே,
விசயமுற்கொண் டெழுபவுத்தன் றலைதுணிக்குங் கருவியே,
மனதிடைப்பைங் கமலவட்டந் தனிலிருக்கும் பிரசமே
மணிநகைச்செந் துவரிதழ்க்கொண் டணிகொண்முத்தந் தருகவே
எனதிடுக்கண் களையநிற்கும் படியெனக்கன் புடையதா
யெனையடர்க்கும் பகையினுக்கும் படையெனக்குன் புடையுமா
தனமெனக்குண் டெனநினைக்குந் தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௧௦),

முத்தப்பருவம் முற்றிற்று.

வாரானைப் பருவம்.

தென்றிக்கிலங்குமலைத்தமிழின்செவ்விச்செந்தேன்முகந்தகன்ற
தெய்வப் பொன்னித் திருநதியிற் செழுநீ ராடிச் செங்கழுநீர்
தோன்றிச் செந்தா மரையலர்த்தி யுயருங் கழுகி னரும்பாளை
யுழக்கிப் பகலின் பொழுதையெல்லா மங்கே யுலாவி யுயர்மகர
வென்றிக்கொடிவேள்கைக்கடுத்துத்திங்கட்குழவிக்கதிர்வீசு
வீசிக்குமுதப்பெரும்போதின்வேரின்மணந்துபசுந்தென்றல்
மன்றிற் புகுந்து விளையாடும் புகலிப் பெருமான் வருகவே.
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே()

சிகரா சலப்பொற் சிலையாளி யிருக்குந் தெய்வத் தோணியாற்
றிசையிற் றிசையின் முறைமுறையி னொலிக்குஞ் சங்கின்சேனையாற்
புகரார் பகழிப் பூமாரன் றுவசத் தெடுத்த சுறவத்தாற்
பூணார் மணியு நித்திலமும் வெயிலு நிலவும் பொழிதலாற்
றுகிரார் கனிவா யின்னமுதுந் துங்கக் கடைவேல் விழிநஞ்சுஞ்
சொல்லார் கமல மதிவதன நல்லா ருடனே தோன்றுதலான்
மகரா லயம்போல் மிகவிளங்கும் புகலிப் பெருமான் வருகவே.
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே()

சடங்கின் படியே யயன்புரியச் சக்ரா யுதன் கைநீர்வார்ப்பச்
சந்த்ரா தித்தர் விளக்கெடுப்ப விந்த்ரா திபர்கூடனிப்போற்றப்
படங்கொண் டகன்ற நிதம்பதடப் பச்சைப்பிடியைக்கலியாணம்
பண்ணும் பெருமான் றிருச்செவிக்குப் பாடும் பெருமான் வருகவே

விடங்கொண்டகன்றுகடைசிவந்துவேலைப்பழித்துச்செலடர்த்து
வெல்லும் புருவச் சிலைவளைத்து விடுகா தளவுந் தாவடிபோய்
மடங்குங் கண்ணர் நடம்பயிலும் புகலிப் பெருமான் வருகவே
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே( )

பாளைக் கமுகின் மிடறொடியத் தாவிக் கதலிக் குலைசிதறப்
பாய்ந்து மறித்துப் புனல்புகுந்து பங்கே ருகத்தின்பரியபசுந்
தாளைத் துகைத்து மலருழக்கித்தாதுட்படியுஞ்சுரும்பெழுப்பித்
தரளஞ்சொரியுஞ்சலஞ்சலத்தைத்தள்ளிக்கரையிற் சதகோடி
யாளைக்கருவிச் சேலினத்தை யடர்ந்து திசையிற் பதின்காத
மகன்ற மடுவி னிடைமடங்காத் தானைக்கொண்டஞ்சாது
வாளைக் களிறு விளையாடும் புகலிப் பெருமான் வருகவே
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே( )

படிக்குந்தெய்வத்தமிழ்மதுரைப்பதியிற்கனலைப்புனல்செய்யும்
பச்சைப் பதிக முடையவர்பாற் பச்சை மாலை நச்சரவ
முடிக்கும் பெருமா னரத்துறையின் முத்துக் குடையா வடுதுறையின்
முடியாச் செம்பொற் கிழிபெற்றமுனிவர்பணிவாரணமோங்க
வடிக்கும் புரவி பிரவிசுழன்றண்டம் பொருதக் கதிர்மாடத்
தரம்பை யனையார்கைக்கமலத்தஞ்சொற்கிளிகள் திருப்பதிகம்
வடிக்குங் கனக மறுகுசூழ் புகலிப் பெருமான் வருகவே
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே( )

பரம்பையடிப்பார்கயல்பிடிப்பார்பாகுசமைப்பார் வட்டமைப்பார்
பாத்தி வகுப்பார்களந்தொகுப்பார்பாடிநடுவார்விதைவிடுவார்
குரம்பை யுடைப்பார் மடையடைப்பார் கூலிகொடுப்பார்போரெடுப்பார்
குமுதங்கொய்வார்கரைசெய்வார்குவளைகளைவார்சேறளைவார்
கரும்பு கழிப்பார் பழங்கிழிப்பார் கதிர்கு டெடுப்பார்கணைதொடுப்பார்
கலப்பைநிரைப்பார்திரைதிரைப்பார்கால்வாய்மறிப்பார்தாள்பறிப்பார்
வரம்பு குறிப்பா ரொலியடங்காப் புகலிப் பெருமான் வருகவே
வடநூற்பெருமான்றமிழ்ப்பெருமான்மறையின்பெருமான்வருகவே( )

வேறு.

முருகு கதிர்விரவு முளரி தருதெரியல்
முழுகு கனகபுயன் வருகவே
முதலி மறைமுதலி கமல மகன்முதலி
முனிவர் தவமுதலி வருகவே
அருகு மலரயனு மரியு மிடவுமையை
யணையு மரன்மதலை வருகவே
அலைய வருபுனலி லனலி லுணரயழியு
மமணர் வயிறுகரி வருகவே

சிறுகு மிடையஞ்சய வுர்க மசையவொளி
சிதறு தரளவட மசையவே
செறியு முடலினிடை வுயிர்க ளஞ்சயவிழி
செருகு மகர்குழை யசையமா
மறுகு தொறுமகளி ரளக மசையவரு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே. (எ)

சுடலை யிடமுமிகு சுருதி மறையுமெழு
துழனி தருமலகை யின்முனீர்
சுழலு முடியுமுடி சொருகு பிறையுநிறை
தொனியை யுதவுதம ருகமுமார்
கடலில் விடமும்விட முடைய மிடறுநடை
கடிய தொருதவள விடையுமா
கரியி னுரியும்வரி யரவு மினிதுடைய
கயிலை மலையன்மகன் வருகவே
புடலை யடுபகழி மதன னினிதுபெற
வுயிரை யவன்மனைவி புகவிடா
ஒளியை யிலகுமுது முளரி வனிதைபெற
வுலகை விழியிணைகள் பெறவொரேர்
மடலை யிளைஞர்பெற மகளி ரழகுபெறு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே. (அ)

இளைய வறுசமய முருட ருரைசிறுக
விறைவ ருரைபெருக வருகவே
இகலி யுலகுபொரு கலியின் வலிதளர
வியலோ டிசைவளர வருகவே
பளைய மடியவரை யமரர் கிளைவளைய
வர்ச னுடனிமிர வருகவே
யழகு துவருடைய பிடகன் முடிகுறைய
வரிய மறைநிறைய வருகவே
விளைய விளைஞிமிறு புதிய விசையின்வழி
விர்கினெடு முர்லி முர்லவான்
வெளியு மிருளவிரு ளகல நிழலுலவி
விண்செய் விழியிளைஞ ருயிரெலாம்

வளைய மகளிர்சிலை மதனை யச்சிலிடு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே. (௯)

கலியின் வலிபொருத நினது புகழ்தவிர
வொருவர் புகழெழுந்து செவிபுகா
கருத வரிபவிரு சரணை மலர்தவிர
விதய மொருநினைவு கருதிடா
வொலிகொள் புகலிவலம் வருவ தொழியவினி
யொருவ ரிடவகையி னிடைசெலா
வுனது திருநிலையை யறியு மெனதுவிழி
யொருவ ருருவறிய விழையெடா
பலிகொள் சமண்முழுகு நினது பெயர்தவிர
வொருவர் பெயரெனது மொழிபடா
படியி லுனைவனையு மெனது தலையமரர்
பலரு மெதிர்வரினும் வளைவுறு
வலிய வெமைவின்வி யடிமை கொளவன்மையும்
வருக மறைமுதலி வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே. (௰)

அகலு முதுபரவை பொதியு முலகுதனி
லரிய பெருமைவர வருகவே
யரிய தவளவொளி பெருகு திருநிழலி
லமரு மழகுவர வருகவே
மிகவு மாணர்பொரு மவையி னவரவர்கள்
விளையும் விரகுவர வருகவே
வெறிகொள் குவளையிதழ் நயன வனிதையுடன்
விடையி விறைவன்மகன் வருகவே
இகலு மிருபுருவம் வளைய வள்கமுட
னிதய கமலமுகை புதையவர்
விதழி நிறமுடைய விளைய ருளமலர
விடையு மிடைதுவள வெழுதொணு
மகளிர் மகிழ்நரொடு கலவி யமளிபுகு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே. (௰௧)

வாரானைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப் பருவம்.

ஈரிய பீலியு மருகர்தந் தலைகளும் பாய்களுஞ் சுடுநாறக்
காதும் வெப்பினுற் பட்டகண் கலக்கலுங் கண்டருட் கண்சாத்தி
வரிகொள் வார்கழல் நின்குலத் தரசன்மேல் மன்னுகூ னுடன்றீர்த்து
வாழ்வு தந்தன னென்பது முணர்ந்திலை மதியிலா யதுநிற்கப்
பரிய போர்வையாற் சீவரந் தாங்கிய பவுத்தனைத் தலைவீழப்
பார்த்தகோபமின் றுன்னையும்பார்க்கிலோர்பார்வையிற்பணிவுண்டோ
வரிய நாயக னுடனினி தாடுதற் கம்புலி வருவாயே
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௧)

வாவு தண்புனல் வளவயல் தழுவிய மருகல்மா நகர்தன்னில்
வணிகனைப்பணி யெயிறுகொண் டுயிருண மாண்டநாள்வணிகேசன்
றேவி புண்படு நெஞ்சுடன் படுதுயர் திருமலர்க் கண்சாத்தித்
திரிய வாருயிர் கொடுத்தவ னிவன்றிரு வடியிணை வீடாமே
கூவு தெண்டிரைக் கடைந்தநாள் நின்மொழிக் கோளினுற் றந்தாங்கு
குன்றந் நாகங்க ளிரண்டும்வந் துன்னுடல் கூடவிண் டுமிழ்ந்தாலு
மாவி யுன்னதா மாகமு முன்னதா மம்புலி வருவாயே
வழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௨)

உரைசெய் கோல்பிடித் தான்றுவா ரின்றியே யோடத்தை வருகென்று
னுயர்ந்தவாண்பனைபெண்பனையாகவுமொருவிழிச்சக்கண்பார்த்தான்
றிரைசெய் வார்புனல் வையையி னெதிர்செலத் தன்றிரு வேடிட்டான்
செய்ய பாலகன் செய்யுமிச் செய்திகள் யாவர்க்குந் தெரியாது
விரைசெய் தாமரைக் கண்களா லுன்கறை மேனியைப் பார்த்தானேல்
மேல்வ ரும்பழி கிடக்கநீ துய்யையாய் விளங்கலாம் விண்ணோருக்
காசறுகென விடுக்கினும் விடுக்குமின் றம்புலி வருவாயே
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௩)

தேன லம்புதண் கொன்றைதுன் றியசடைத் தேவர்கள் மணவாளன்
செம்பொன் மேனியைப் பகிர்ந்துகொண் டிருந்தவள் திருமுலைப்
பெருகும்பால்
ஞான முண்டுதெண் டிரைப்புவிப் பாப்பினில் நடத்திய வறுபத்து
நாலு வண்கலை நிரப்பிய முனியிவ னரந்தநாண் மலர்நாறுங்
கான லங்குழற் காதுதோய் மதர்விழிக் கவுரியர் பரிவின்கட்
கண்ட கண்டிட மெங்குநின் றேங்கிடக் கழிவில்லாப் பெருமானு
ஞன நின்கலை குறைவற நிரப்பலா மம்புலி வருவாயே
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௪)

தந்த னுரையுந் தமயனு ரையும்பெறு பேதையும் பெம்மானுங்
கழிவி லாதபே ரின்பமே யினிதுறக் கடையுகப் பெருவெள்ளம்
வந்து கோலுநா ளுலகெலாந் தனித்தனி மயங்கவு மயங்காது
மன்னு தோணியாய் மிதந்தவூ ரிவன்பதி மாலுநான் முகனும்பே
ரிந்தி ராதியு முனிவருஞ் சுரர்களு முலகுளோ ரெல்லோரு
மெங்கு ளார்கொலோ வென்னவப் பிரளய மின்னமும் புவிநோக்கு
முந்த நாளிலுந் தோணியைப் பற்றலா மம்புலி வருவாயே,
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௫)

தழைத்த சோலைசூழ் மயிலையம் பதிதனிற் சண்பகப் பூங்கொம்பிற்
சாரும் வல்விடந் தீண்டின முயிர்விடுந் தத்தைதன் றிருவென்பு
குழைத்த சாந்தகி லளவிய குங்குமக் கொங்கைகளுடன் செம்பொற்
குடத்தில் வந்தெழச் செந்தமிழ்த் திருவிசை கோத்தவ னிவனுன்னை
யிழைத்த வன்பணப் பாம்பின்வாய் பட்டுநீ யாருயி ரிழந்தாலு
மினிய செஞ்சொலா லுன்னையு மிங்ஙனே யாவரு மெதிர்கொள்ள
வழைக்க வல்லவ னிவனுட னுடுதற் கம்புலி வருவாயே
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே (௬)

வேறு.

ஆடல்ப டுஞ்சுத விதழ்வி ரிஞ்சனை வருக வென்றில னணுகொணா
வமர்செய் கஞ்சனை வினைசெய் வஞ்சனை வருக வென்றில னலைகடா
முடைய வெங்களி றுடைய வன்றனை வருக வென்றில னருளொலா
முதிர வந்தெழு கதிர வன்றனை வருக வென்றில னுடுவலா
மிடைவி டும்படி நெடுகு சண்பக வடவி துன்றிய முகையெலா
மிதழ்வி ரிந்தநி லொழுகு தண்புன லலையெ றிந்தெழு கழனிவாய்
மடைவி டும்படி பெருகு சண்பைய ரதிபன் வெங்குரு வுடையகோன்
வருக வம்புலி வருக வென்றனன் வருக வம்புலி வருகவே. (௭)

பிரசு முந்திய மலரின் வந்தெழு பிரமர் தம்பத மருளவோ
பெருகு தெண்டிரை நடுவு கண்டுயி லரிபெ ரும்பத மருளவோ
வரசெ னும்புகழ் நிலைபெ றும்புழி யமரர் தம்பத மருளவோ
வகல்வி சும்பினி லிருளொ துங்கிய பகல வன்பத மருளவோ
விரைத தும்பிய பழன வெங்குரு வுடைய செந்தமிழ் விரகன்மேல்
விழியு டங்கலு மழிய வந்தெனை வினவி யென்கிளை கிளையெலாம்
வரிசை தங்கிட வடிமை கொண்டவன் வளமை தங்கிய புகலியான்
வருக வம்புலி வருக வென்றனன் வருக வம்புலி வருகவே. (௮)

அளவில் தொண்டினர் பெருமை கண்டுதம்மடிமையென் றடிபணியலா
மரிய வன்றிரு விசைமு கந்திரு செவிநி றைந்தறி வறியலா
மிளைய மங்கையர் வதன சந்திர ருறவெனும்படி திரியலா
மிரவெ ழுந்தது பகலொ துங்கிய தெனவெ ழுங்குறை தவிரலா
மொளிம ழுங்கிட முனியி டும்படி யிலதெ னும்படி புகுதலா
முரிய நின்குல வரசெ னும்படி யுடல்வ ளைந்தது நிமிரலாம்
வளைசொ ரிந்தன தரள மெங்கணும் வளமை தங்கிய புகலியான்
வருக வம்புலி வருக வென்றனன் வருக வம்புலி வருகவே (கூ)

கயிறு கொண்டரி யயனெ டிந்திரர் கணம டங்கலு மகரமேய்
கடல்க டைந்தமு துணவி ரும்பிய சலதி யின்கணோர் பகையினு
லெயிறு கொண்டுன துடல்வி ழுங்குவ னெனவ ரும்படி வரவுநீ
டியபெ ரும்பணி யுடன்வ ரும்படி புரிபு வஞ்செய வருமையோ
லெயிற ரும்புக விரவு தந்தலை மயிர்பி டுங்குதல் தொழிலதாய்
விழும மண்கிளை கரிச ரும்படி விரக நிந்துல குடையதாய்
வயிறு வந்தெனை யடிமை கொண்டவன் வளமை தங்கிய புகலியான்
வருக வம்புலி வருக வென்றனன் வருக வம்புலி வருகவே. (ம)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

சிற்றிற்பருவம்.

சுழியா லெறிக்குந் திரையுகைத்த சூல்வெண் சங்கு நீலமலர்க்
கழியால் வந்து வயல்புகுதுங் காழிக் கரசே முலை சுரந்த
மொழியான் முடியாப் பெரும்பொருளை முன்னே காட்டி யுலகமெல்லா
மழியா வகைவந் தாட்கொண்டா யடியேஞ் சிற்றி லழியேலே. (க)

பிடித்தார் பிடித்த கதியேநின் றிட்ட பிண்டந் தின்றவமே
தடித்தார் மெலியத் தமிழ்பாடுஞ் சண்பைக் கரசே தனியேற்றின்
கொடித்தா னுடைய பெருமான்பங் குடையா ளுடைய குலமகனே
யடித்தா மரையின் முத்துறைப்ப வடியேஞ் சிற்றி லழியேலே, (உ)

சாதித் தெமது பாவமெல்லாந் தள்ளித் தள்ளா டாவகையே
பேதித் தடியா ரடிமைசெய வழியாட் கொண்ட பெருமானே
சோதித் தயன்மால் தேடரிய தோன்றாப் பொருளைத் தோன்றுவித்த
வாதித் தியனே தமிழ்க்கரசே யடியேஞ் சிற்றி லழியேலே, (ங)

சுழிக்கும் பெருஞ்சா றலையெறிய நூறு யிரம்பேர் சூழ்கரும்பு
கழிக்கும் பழனக் கழனிசூழ் காழிக் கரசே வேதத்தைப்
பழிக்கும் பொல்லாப் பரசமயப் பகட்டைப் பால்வாய்ப் பசுந்தமிழா
வழிக்கும் புகலிப் பெருமானே யடியேஞ் சிற்றி லழியேலே. (௪)

வழுதி கூனு மவன்வெதுப்பு மாற்றி மண்மே லொருநாளும்
பழுதி லாத திருநீறும் பஞ்சாக் கரமு நிலைநிறுத்தி
யெழுதொ ணாத நான்மறைக்கு மடியேங் களுக்கு மெல்லார்க்கு
மழுது வாழ்வு தந்தோனே யடியேஞ் சிற்றி லழியேலே. (௫)

வேறு.

வருகதிர் விட்ட வெழுபரி வழியை விலக்கி யெழுபொழின்
முருகெழு கொச்சை வளநகர் முதல்வ தலத்தி னெடுபொரு
வொருகலி வெற்றி யிதுவல வுலகி னிடுக்க ணிதுவல
வருக ரிருக்கை யிதுவல வடியவர் சிற்றி லழியேலே. (௬)

பழிகள் பெருக்கி மயிர்பறி பழகு முருட்ட வமணரை
வழிவழி கட்டி யுயர்கழு மரத்தி லிருத்தி யழல்புக
விழிகள் சிவக்கும் வழுதிதன் விதியை விலக்கி யுடல்வளை
வழியை நிமிர்த்த தவமுனி யடியவர் சிற்றி லழியேலே. (௭)

எழுபுவி பெற்ற திசைமுக னிலகு சிரத்தி னரனிசை
மொழியு மறுக்கி லுயர்தவ முனிவர் மனத்து முளரியில்
வழுதி நிமிர்த்த முதுகினில் மகளிர் கயற்க ணிணையினி
லழகெழ வைத்த வடியிணை யடியவர் சிற்றி லழியேலே. (௮)

மறுவில் தமிழ்க்கு விளைபுல மலருல குக்கு மனவலி
முறுகு கலிக்கு முதுபகை முதன்மை மறைக்கோர் தனிமுதல்
துறும மணர்க்கோர் வயிறெரி சுருதி யிசைக்கோர் புகலிட
மறுமுக வர்க்கோ ருறுதுணை யடியவர் சிற்றி லழியேலே. (௯)

வழுதி பிழைக்க வருளிய மதுமல ரொத்த விணையடி
புழுதி படைத்த தெனவுமை பொடியிலு மிச்சை யமணுடல்
கழுகு வெறுக்க வுயிரொடு கழுவி லிருத்தி யுலகினை
யழுது வளர்த்த தவமுனி யடியவர் சிற்றி லழியேலே. (௰)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

சிறுபறைப் பருவம்.

கருதரிய முத்திதரு காரே கலைகணிறை வுற்றமறை வேரே
பொருகலி துணித்தபுகர் வாளே புவனமகள் பெற்றபெறு பேறே
யரியவிசை கட்டுமடு பாகே யதிமதுர மிக்கதெளி தேனே
திருமூல சுரக்கவரு பாலே சிறுபறை முழக்கியரு ளாயே. (க)

அளியிசை முழக்கவொரு பாலே யணிவளை முழக்கவொரு பாலே
கிளிமிசை முழக்கவொரு பாலே கிடையொலி முழக்கும்வள நாடா
குளிர்புன லகத்தினிடை யேவாழ் குமுதமல ரொத்தவித ழாலே
தெளிதமி ழுரைத்தபெரு மானே சிறுபறை முழக்கியரு ளாயே. (உ)

இனவமணர் பொய்ச்சொல்பெரு காமே யெழுகலி தலத்தைநலி யாமே
முனிவர்கள் தவத்தையொழி யாமே முதன்மறை வழக்குமழி யாமே
மனுநெறி பிழைக்கநட வாமே வழுதியுடல் வெப்பிலுரு காமே
தினகரனை யொத்தவொளி யானே சிறுபறை முழக்கியரு ளாயே. (ங)

அருகரொடு புத்தர்குல காலா வழல்வலி தவிர்த்ததமிழ் வீரா
முருகுகமழ் கொச்சைவள நாடா முடுகுதிறல் மிக்ககலி கோபா
பருவரையை யொத்ததிர டோளா பரனையறி வித்தவிர லாளா
திருவிசை யளித்தகனி வாயா சிறுபறை முழக்கியரு ளாயே. (ச)

உவரெழு மனக்கருவ ராமே யுயர்கதலி விட்டகனி யாருய்
நவரச மளித்தவய லாலே நலமருவு கொச்சைநக ரானே
யவகதியி லுற்றுமெலி யாமே யடியவர் பிழைக்கவரு ளாலே
சிவகதி யளித்தபெருமானே சிறுபறைமுழக்கியரு ளாயே. (ரு)

வேறு.

எழுதுவன கொடிகளொடு கொடியுமிடை நெடுமருகி
லெதிர்கொள் ளகத்திருளின் வாய்
முழுமதியு மிருபொழுது முலவவிளை ஞர்கள்வதன
முளரியலர் கொச்சைநக ராய்
வழுதிதெரி தருதமிழும் வளருமிய லிசைநடமும்
வடமொழியு மிக்கபொருள் சேர்
செழுமறையு மழகுவர வழுதிதிரு நிலையழக
சிறுபறை முழக்கியரு ளே. (சா)

புவனமுழு துடையதிரி புரையமலை விமலைமுலை
பொழியமு தருந்துபுதல் வா
தீபங்குல பதிமகட னிதயமகிழ் வுறமதுரை
தனில்ம ணுறுத்தசிறு வா
அவனிமுழு துலகமுழு துடையவரு ளியவயனு
மறியுமறி தற்கரிய தோர்
சிவனையிவ னெனவிரலி னுதிகொ டளவிடுமுனிவா
சிறுபறை முழக்கியரு ளே. (எ)

முறுகுதழ லிடைகுளிர மலைமகடன் முலைகுலவு
மொழியெழுதி விட்டுநதி நேர்
குறுகியெதிர் செலவமணர் வயிறுளெரி செலவினிமை
கொள்விய லுரைத்த முனிவா
வறுகுநிரை மலரிதழி யலையினதி நகுதலையொ
டரவுவெ ளெருக்கினுட னே
சிறுகுபிறை பொதிசடில முடியிறைவர் தருபுதல்வ
சிறுபறை முழக்கியரு ளே. (அ)

வருநெறியி லமணர்கழு வினில்மடிய வழுதியுடல்
வளைவினை நிமிர்த்துலகு ளோர்
கருநெறியை யகலவரு ளதியதுர கவிதைதரு
கவுணியர் குலக்குரிசி லே
ஒருநெறியை யருள்பரனு முமையுமிமை யவர்கிளையு
முனதுபதி கொச்சையுடன் வாழ்
திருநெறியு மடியவரு முலகுமுய விஞனினிது
சிறுபறை முழக்கியரு ளே. (கூ)

சிறுபறைப் பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப் பருவம்.

கோடு படைத்த வகிற்பல காடு முறித்து முகிற் படலங்
குத்தி மலைத்தலை தத்தி மணித்திரள் கொள்ளை முகந்துபணச்
சேடன் முடிப்பிடர் வைத்த தலங்குழி யக்குழி கொண்டுவனச்
சேவ லுகைத்தவ னென்ன நிலத்தை யகழ்ந்து நிகழ்ந்துவிடாப்
பாடு மணிப்பெடை பாயு மதக்கடல் பாய வனக்கொடியோன்
பள்ளி யெடுத்தெறி முள்ளியி னிக்கரை யக்கரை யிற்செலவென்
றோட மழைத்த பசுந்தமி ழாளி யுருட்டுக சிறுதேரே
யுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (க)

தக்க வரைப்பணி கொண்ட வரைக்கழல் தந்த வரைக்கதிர்வாள்
　　தான வனுக்கருள் செய்த வரைப்புர மான தழற்புகவே
நக்க வரைத்தனி நட்டு வரைக்கன கக்கிரி பெற்றவள்பால்
　　நல்ல வரைச்சிலை வில்ல வரைக்கரு நாரண னுக்கரிதா
மிக்க வரைக்கம லத்தவ ரைத்தலை கொண்ட வரைப்படிசூழ்
　　வேலை விடத்தினை யுண்ட வரைத்திகழ் பாலையு நெய்தலுமா
யொக்க வுரைத்த பசுந்தமி ழாளி யுருட்டுக சிறுதேரே
　　யுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (௨)

திண்மை படைத்த கயற்கொடி மாறன் வெதுப்பொடு கூனிமிரச்
　　செய்த மருந்து செழுந்தமிழ் வல்லி தழைக்க விருத்தியவோ
வெண்மை படைத்த வெலும்புட லாக நிறுத்திய வேதகனல்
　　வேத முடிந்த பழம்பொரு ளுண்மை விளைந்தெழு வித்தகவா
வண்மை புதுக்கிய கற்பக மன்பர்கள் வைத்த சரக்கறைசூழ்
　　வல்ல மணர்க்கு வழிப்பகை யீசன் மனத்தில் மகிழ்ச்சிவிடா
துண்மை படைத்த சிறுக்கலி கோப னுருட்டுக சிறுதேரே
　　வுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (௩)

ஆதி யுகந்தனி லன்னமு மேனமு மன்று முதற்கரிதா
　　மங்க ணிமைப்புற விங்ங னெமக்கருள் செய்தவ னவ்வுருவிற்
பாதி யுகந்தவள் சீதள நித்தில மாலை முலைக்கலசப்
　　பாலினை வெங்குரு மாநகர் நின்று பரிந்தினி துண்டமுதாய்
வேதமு மங்கமு மாதி புராணமு மெய்த்தமிழ் நூல்களினல்
　　வேலை புரந்தின சோலைக ளெங்கும் விளங்க விளங்கவிரித்
தோதுத லன்றி யுணர்ந்தருள் பத்த னுருட்டுக சிறுதேரே
　　வுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (௪)

பொருளி லகத்தொடு வருமொரு புத்தன் முடித்தலை யுருளநிலம்
　　பொங்கு கருங்கலி நாகர் விலக்குழி புக்கரு ளத்திருநீ
றருள்து பெற்றணி வார்பிணி யானது மப்படி யுருளநிலத்
　　தாணுரு விற்பனை பெண்ணுரு வாகி யதிற்பழ முருள்மறைக்
குருளை பயப்பட வெங்கனல் போலழற் பொங்கு கொழுந்தெழுசெங்
　　குஞ்சி படைத்துல கஞ்ச மிரட்டிய கோல மிடைக்கொடியோ
னுருள் வுருட்டிய சேவகன் மைந்த னுருட்டுக சிறுதேரே
　　வுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (௫)

வேறு.

கருமா முகிற்படல முழுமு வகிற்பணைக
ளொடியா விடிக்குரல்கள் போற்
கதறு மதக்களிறு சிதறு மலைத்தலைகள்
கடவா விசைப்பரவை சூழ்
மருவார் மடற்கமுகை வளையா மலர்க்கமல
மடுவூடு புக்குமகி ழா
வருகா விரித்திவலை வயல்தாவு கொச்சைதிகழ்
வளநாட மிக்கவெளி கூர்
பருமா மருப்பின்க நுரைவாய் குதட்டிவரு
பணிநீ ரளக்கர்புடை சூழ்
படிபா தலத்தளவு நிலைபேர வெட்டொரிய
படர்சோதி நச்சி நெடுநாள்
திருமா லளப்பரிய பெருமா னளித்தமுனி
சிறுதே ருருட்டியரு ளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டியரு ளே. (௬)

பருவே ரதிற்குறடு தருசே றதப்பிமிகு
பணிநீ ருழக்கி யிளைஞர்
பழியே துடக்குமின் முலைகாண நிற்கிலிவை
படிறே முடிக்கை தவிரா
வுருவே படைத்துலகி லுறைகா முகர்க்குடலி
னுயிர்பேணி நிற்கும் நினைவே
தொழியீ ரெனப்புனைய மணிநூ புரத்தொகுதி
யொழியா தரத்த விதழா
மருவே தழீஇக்குவளை மலரே தனப்பகழி
வடியே னெனப்பகரு மா
வடுவே யெனக்கொடிய கடுவே யெனத்திரியும்
விழியால் வளைத்து மடவார்
செருவே துவக்கிவரு பிரமா புரத்தகிப
சிறுதே ருருட்டியரு ளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டியரு ளே. (௭)

வரையான் மகட்கரசு நடமாடு பொற்பொதுவின்
மணிவார நச்சரவொ டே
மதவானை யர்ச்சனைசெய் பதிமீது பெற்றதொரு
வளரா மவர்க்கை மறைநூ
லரையா யெனப்பரவு சிவன்மேவு கச்சியினி
லலராய நற்சிவிகை கீ

ரண்டவே படைத்ததமிழ் விரகாமுருட்டு வட
வமணு சறுத்தகளி றே
யுரையா விருட்டுருவ விடமான திட்டுமழு
ஓுறுநீறு வைத்து மெதிரே
யுயரான விட்டுமிவை நலியாமல் மிக்கசிலை
யொருதூணொ டொக்க விடுநாள்
திரையாற் கடற்கரையி னினிதேறு மப்பர்துணை
சிறுதே ருருட்டியரு ளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டி யருளே. (அ)

இவனே வெதுப்புகல விடுவா னெனச்சமண
ரிகழ்வே யுரைக்க வழுதி
யெழுகா விரித்தலைவன் மகளார் தமிழ்க்கலையி
னினிதா வெடுத்தவர ச
ரவனே மதிக்கவவன் முதுகூ னிமிர்த்துமவ
னகுநோய் தவிர்த்துமடி யோ
மடியே துடிக்கும்வகை யருணீ றெமக்குதவு
மழகா ரடைத்தசிறு தாள்
தவனே திறக்கைபணி யெனவே மறைத்தலைவர்
தமைநா வினுக்கரச ரை
தமிழ்பா டிடக்கதவு தனையே முதற்பரவு
சதுநா லடைத்தபடி யே
சிவனே யடைத்தருள வெனவோது கொச்சைமுனி
சிறுதே ருருட்டியரு ளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டியரு ளே. (௯)

அலையார் புனற்கருக் பிறையாய் முடித்தபிறை
யருசே யெருக்கடவி யா
யடரா மெருக்கினிடை யரவாய் நெருக்குமர
வருகே கடுக்கை மலரா
யிலையார் கடுக்கைமல ரருகே நங்கைத்தப்ல
தலையாய் விரித்த சடையா
யிமவான் மடக்கொடிதன் மணவாள னெப்பரவு
மிசையாய் தமிழ்க்கரசு நீ
ணிலையாய் நிலைக்கருகு மலராய் மலர்க்கருகு
ஞிமிருய் நிமிர்த்தருகு மா
நிலையாய் நிழற்கருகு வளைவாய் வளைக்குருக்
மணியாய் மணிக்கரு வெனச்

சிலையாய் விலக்கிமிகு பிரமா புரத்ததிப
 சிறுதே ருருட்டியரு ளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
 சிறுதே ருருட்டியரு ளே. (௰)

சிறுதேர்ப் பருவம் முற்றிற்று.

நூற்பயன்.

தண்காழிச் சம்பந்தன் தண்டைக்கா லின்புயனைக்
கண்காள் பருகிக் களியுமிரே—நண்ணுதாரைக்
கந்திடுமா வென்றுன் கவிதையோ தும்பொழுதே
தந்திடுமே பேரானந் தம்.

(வெண்பாப்பாட்டியல் உ,அ.)

சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய வெண்முத்தம் வாரானை—போற்றரிய
வம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

பருவங் கொண்ட
சம்பந்தர் பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமாசிலாமணி தேசிகர் ஸ்துதி.

திருவெண்கா டுறைமறையோ ருச்சிட்டஞ்
 சேர்கூவற் செறிகீ டங்கள்
பெருகுமுவர் நீர்கண்ட தஞ்சையிறை
 மகிழவன்பிற் பிறங்கு மாகே
சுரருண்ட பரிகலத்தா னுவர்க்கூப
 நறுநீராய்ச் சுரக்க மேலாம்
அருளுந்து கோமுத்திக் குருமாசி
 லாமணியா ரடிகள் போற்றி.

பிரதி பேதம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிரதி	பேதம்.
1	காப்பு	2	ப்பேன்	வேன்
3	4	19	ம ணி	முனி
		24	ய்முட் டாது	யமுத்
		28	க்கார்க்	த்தாற்
4	6	1	யி	யெட்டி
7	2	1	யத்திரிபுரஞ்	த்தின்முறுவலிற்
8	5	1	தாமரைக்	கண்ணனுங்
		2	னுதரக்	னுந்திக்
	6	1	னூர்ந்	னுகந்
10	2	5	சிறைதோய்	சிலர்பாய்
		3	கருவை	கருவி
			முட்டப்	முட்டவயிற்
			பயில்பற்	பயலக்
11	5	6	பாகத் தெதிரத்	பாலெதிர்த்தேறத்
14	2	1	களமர்	கிளைஞர்
17	9	13	நலம்	நிலம்
18	1	1	வடம்	விடம், வலம்
		4	வானவரும்	வாசவனும்
	2	4	தாவிப்	தாவிப்
	3	4	மேய்	மோ
		6	செங்	சிவ
19	5	2	கிரி	குழி
	6	5	டிகை	டடி
		7	சமணரை	சணவரை
20	1	1	றிக்கி	றஙி
		5	ள்கைக்க	டனுக்கெ
22	7	5	மறுகு	மருகு
	9	9	விசையின்வழி	விரைவழியை
23	10	13	வெமை	வெனே, வுமை
25	6	4	செந்தமிழ்	சேதக, செவ்விழி
29	9	7	விஞு	வின
30	4	6	புரந்தின	பொருந்தின
31	6	11	பேர	பெற, பேர்
			வெட்டொரிய	வேட்டோரிய
			ஓரிய	ஓரீஇய.

PRINTED AT THE THIRUPURASUNDARI PRESS, SHIYALI.

உ

விளம்பரம்.

இதுவரையிலும் வெளிவராத | சைவசித்தாந்த சாத்திரம்.

ஸ்ரீ பண்டார சாத்திரம்.

திருவாவடுதுறையாதீனத்து ஆன்றோர்கள் சைவசித்தாந்த சாத்திரங்களின் அரிய பெரியவிஷயங்களைத் தெள்ளிதின் விரித்துரைக்கும் ஒரு சிறந்த அநுபவ நூற்றொகுதியாகும். சைவ சித்தாந்தம் உணரவிரும்புவோர்களுக்கு இஃதோர் அடிப்படையான புத்தகமாகும்.

கிரயம் ரூ 2.

கிடைக்குமிடம்:—

மகா-௱-௱-ஸ்ரீ

சு. சிதம்பரமுதலியார்,

பென்ஷன் சப்ரிஜிஸ்ட்ரார்,

வடக்கு வீதி, சீகாழி.